# Education Expo - 2013

**இளைஞர்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்**



**4 மே 2013**

**திருச்சுழி**

### 10 மற்றும் +2 மாணவர்களுக்கான

# உயர்கல்வி வழிகாட்டி 2013





*Published by:*

RCPDS SPEECH

Thiruchuli



# Education Expo - 2013

**Evolving** and improving lives through Education, especially for the socially marginalized children and building a rich pool of human resource is the prime objective of **RCPDS** (Resource Centre for Participatory Development Studies) and its parent body, **SPEECH** (Society for Peoples Education and Economic Change). Both **RCPDS** and **SPEECH** have developed their own network of educational opportunity for marginalized children in the most excluded Blocks of Virudunagar District through existing schools. Our network focuses on creating wider opportunity for first generation scholars from marginalized communities to access best educational opportunity. Right from childhood using Child Rights Approach we endeavor to foster Rights perspective, love for knowledge and have launched various multifaceted activities to ensure basic Child Rights.

So far jointly with our International partners – Christian Children Fund of Canada and Kindernothilfe, Germany we have we have promoted more than 10,000 students across the blocks over a period of ten plus years, which created a tangible impact among the communities and mainstream institution around the District. Currently we have more than 2800 children from Tiruchuli, Narikudi, Aruppukottai and Kariyapatti Blocks have joined various prestigious institutions both professional and general higher education. This accounts for our credibility with local communities and our proximity institutions. In the yester years we have organized simple localized Education Mela to ensure implementation of Right to Education Act in its fullest vigor and are successful in ensuring 100% eradication of drop outs as well children falling victim to child labour scenario.

The "Youth Development Centre" introduced by SPEECH in partnership with CCFC is a novel step towards encouraging the meritorious poor students to pursue life skills with technical excellence and build professional competency to use their God given potentials. Since most of the youth are first generation scholars, they lack appropriate guidance and exposure from within their own families and communities. This place all of us on the obligatory side to assist children from our fellow communities to give a starter point to build our Nation. So far the Child Focused Community Development (CFCD) and Youth Development program enabled over 350 students who passed +2 examinations to take up various higher education courses in most of the institutions around Tiruchuli and Narikudi as part of the regular development intervention by various linkage interventions.

The scope of this noble cause is further expanded through provision of Higher Education Funds implemented through the Women Federation and respective CRPCs to ensure our youth access quality education with unburdened financial constraints.

Jointly with Devanesan Memorial School, Sivakasi and Children Movement for Climate Justice (CMCJ) SPEECH/RCPDS initiated a new award scheme for children called "Conventional Knowledge System for Ensuring Child Rights and Sustainable Development" (CKS4ECSD) which aims at encouraging small scale creative initiative by children in the areas of improving livelihood, food security, climate mitigation and adaptability and alternate energy options.

.As part of the ongoing process, 2013 we proposed to organize, “Education Expo” for children and youth from interior villages of Tiruchuli, Narikudi and Kariapatti Blocks of Virudunagar district, which will attract 1000 plus youth who have completed +2 last academic year as well appeared for this year.

This Expo expected to bring in wide range of knowledge from various renowned institutions in and around Tiruchuli which will provide a ample educational orientation and opportunity for youth to join the main stream.

Proposed course streams include Engineering, Paramedical, Polytechnics, Industrial Training, catering, Teaching, Dental and alternate medical sciences and preparatory platforms for civil services appropriate. “ Youth Development Center” promoted by SPEECH will be the primary co-ordinating body, while “Across the Road” neighborhood scheme of RCPDS will be the conceptual and business promotion agency for the event.

## Anticipated Student strength

1000 plus from three blocks of Virudunagar

## What the event will offer

A reasonably decent stall to display course material and information related to the respective institution as well a seminar hall time (a maximum of 30 minutes) to address students on the scope of them joining the respective course and institution. This event will provide direct opportunity for institution to attract students to their respective institutions, spot admissions if possible and continued liaison with the institution as student mentor.

## Our expectations on the part of the participating institutions

Explaining students about the courses available, required cut off marks, fee structure, scope of different courses offered by the respective institutions, scholarship and discount offers to first generation scholars and dalit children, educational loan opportunities if any, preparing or challenging children to face and shape their future as constructive contributors to National Building. There will be seminar hall, which need to be booked in advance along with confirmation of participation, wherein the participating institution can address students to highlight the specialties and features of their respective institutions.

**Dr John Devavaram**
**Founder**
**SPEECH / RCPDS**

# 10 மற்றும் +2 மாணவர்களுக்கான
# உயர்கல்வி வழிகாட்டி

**10 மற்றும் +2** பொதுதேர்வு எழுதி முடித்த அத்தனை மாணவர்கள் முன் நிற்கும் கேள்வி? அடுத்து என்ன செய்வது? எதை படிப்பது? எங்கே படிப்பது? எதை படித்தால் வேலைக் கிடைக்கும்? எந்த கல்லூாயில் படிப்பது? தேர்ந்தெடுக்கும் கல்லூரியின் தரம் என்ன? உயர் கல்வி கற்பதற்கான வசதியுள்ளதா? இல்லை அதற்கான கல்வி கடன் கிடைக்குமா? அதை எப்படி பெறுவது ? என எண்ணற்ற கேள்விகள் எழும்? குழப்பங்கள் தோன்றும். அதுவும் குறிப்பாக கிராமப்புற மாணவர்களுக்கு இது அதிகமாகவே காணப்படும். மேலும் தனக்கான வழிகாட்டுதலை யாரிடம் பெறலாம்? என்ற சந்தேகமும் எழும்? இவற்றை போக்கவே, குழந்தைகளின் கல்வி நலனில் அக்கரையுள்ள **SPEECH** மற்றும் **RCPDS** நிறுவனங்கள் இணைந்து குறிப்பாக கிராமபுற மாணவர்களின் கல்வி மற்றும் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் வண்ணம் இந்த உயர்கல்வி வழிகாட்டி கையேடை வெளியிடுகிறது. இதில் மாணவர்களின் உயர் கல்விக்கு தேவையான தகவல்கள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

பிளஸ் 2 படிப்புதான மாணவர்கள் வாழ்கையில் அவர்களின் திருப்புமுனையை ஏற்படுத்த கூடிய தருணம் ஆகும். அந்த தருணம்தான் அவர்களது எதிர் காலத்தை தீர்மானிக்க கூடியதாக உள்ளது. ஆகவே இந்த நேரத்தில் உயர்கல்வி எடுக்கும் மாணவர்கள் எடுக்கும் முடிவுகள் அவர்களது எதிர்காலத்தையே முடிவு செய்யும். இனி படிக்க போகும் படிப்பின் மூலம் நல்ல வேலை கிடைக்குமா? நல்ல ஊதியம் கிடைக்குமா என்றுதான் இன்றைய மாணவர்களும், பெற்றோர்களும் எதிர் பார்கிறார்கள்.

பெற்றோர்களைப் பொறுத்தளவில், தங்களின் பங்காக, எத்துறையில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் இருக்கின்றன, எத்துறையில் அதிகளவிலான முதலீடுகள் செய்யப்படுகின்றன போன்ற விஷயங்களை ஆராய்ந்து, அதன்மூலம் தங்கள் குழந்தையின் படிப்பு தேர்வுக்கு உதவ வேண்டும்.

மாணவர்களைப் பொறுத்தவரை, பெரிய பிரச்சினை என்னவென்றால், அவர்கள் தங்களின் முடிவுகளை, இறந்தகாலத்தை அடிப்படையாக கொண்டே மேற்கொள்கின்றனர். ஆனால், எதிர்காலத்தை கணித்து, தற்போதைய நடைமுறையை கவனத்தில் கொண்டு அதன்படி, தங்களின் எதிர்கால கல்வித் திட்டத்தை வகுப்பதே புத்திசாலித்தனம். உதாரணமாக கூறவேண்டுமெனில், உலகளவில், ஆற்றல், உள்கட்டமைப்பு, வங்கியியல், நிதி மற்றும் முதலீடு போன்ற துறைகளில், உலகம் முழுவதும் அதிக வாய்ப்புகள் குவிந்துள்ளன.

இதேபோன்று, எதிர்காலத்தில், எலக்ட்ரிகல், எலக்ட்ரானிக்ஸ், சிவில், கணிப்பொறி அறிவியல், ஜியோ இன்பர்மேடிக்ஸ், மெட்டீரியல் சயின்சஸ் இன்ஜினியரிங், பார்மசூடிகல் இன்ஜினியரிங், பெட்ரோலிய சுத்திகரிப்பு மற்றும் எலக்ட்ரோகெமிக்கல் இன்ஜினியரிங் போன்றவை சிறப்பான வளர்ச்சியை அடையும் துறைகளாக மதிப்பிடப்படுகின்றன.

மேற்கூறிய படிப்புகளை மட்டுமே எடுத்துக்கொண்டு, மற்ற துறை தொடர்பான படிப்புகளைப் படித்தால், வாய்ப்புகளே இல்லை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. மேற்கூறிய துறைகளில், அதிக முதலீடுகள், அதிக திட்டப் பணிகள் மற்றும் வாய்ப்புகள் இருக்கும் என்பதே அதன் அர்த்தம்.

சுய தொழிலில் ஈடுபட விரும்பும் மாணவர்களுக்கு, உணவு தொழில்நுட்பம் மற்றும் பிரிண்டிங் தொழில்நுட்பம் ஆகியவை பொருத்தமானவை. அதேசமயம், இத்துறைகளில் எடுத்தவுடனேயே ஒருவர் அதிகம் சம்பாதித்து பெரிய ஆளாகி விடலாம் என கனவு காணக்கூடாது. முறையான பயிற்சி எடுத்து, சரியான அனுபவம் பெற்று, தொழிலின் நுணுக்கங்களைக் கற்று தேற வேண்டும். பிறகுதான், நிறைய சம்பாதிக்க தொடங்கி, பலருக்கு வேலைவாய்ப்பையும் வழங்கும் நிலையை அடையலாம்.

இந்த கையேடு உங்கள் உயர்கல்விக்கு சிறந்த வழிகாட்டியாக இருக்கும் என நம்புகிறோம். மேலும் உங்கள் எதிர்கால வாழ்க்கை வெற்றி பெறவும் வளம் பெறவும் நாங்கள் எங்களது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்த்துகள்.

# இளங்கலை மூன்றாண்டு பட்டப்படிப்புகள் குறித்த தகவல்கள்

| பட்டங்களும் துறைகளும் | தகுதி (+2 வில்) |
|---|---|
| B.A தமிழ், இந்திய கலாசாரம், கூட்டுறவு, நுண்கலை, ஓவியம் & கைவினைக்கலை,இசை,சோசியாலஜி, தத்துவம், வரலாறு, அரசியல், பொது நிர்வாகம், வங்கி நிர்வாகம், கார்பரேட், செச்ரட்ரிஷிப், சுற்றுலா நிர்வாகம், சைகாலஜி<br>B.Lit (தமிழ், ஆங்கிலம்)<br>B.T.T.M (சுற்றுலா நிர்வாகம், B.C.M (சுற்றுச்சூழல் நிர்வாகம்), B.L.M (தொழிலார் நிர்வாகம்), B.S.W (சமூகப்பணி) | எந்த பிரிவில் படித்தவர்களுக்கும் |
| B.B.A, B.B.M | முன்னுரிமை காமர்ஸ் குரூப் |
| B.Sc. - காஸ்ட்யூம் டிசைன், கிராமப்புற மேம்பாடு, தடயவியல், புவியியல், ஜியாலஜி, ஹோட்டல் மேனேஜ்மெண்ட் & கேட்டரிங், பேசன் டிசைன், இன்டீரியர் டிசைன், மறுவாழ்வு கல்வி, நூலக அறிவியல், டெக்ஸ்டைல் டிசைன், ஹாஸ்பிட்டல் நிர்வாகம், B.Sc - விஷூவல் கம்யூனிகேஷன் (3 வழ 5 ஆண்டுகள்) | எந்த பிரிவில் படித்தவர்களுக்கும் |
| B.Sc கணிதம், புள்ளியியல் (Statistics) | கணிதம் / வணிகக் கணிதம் |
| B.Sc. Home Science (மனையில்) | முன்னுரிமை - அறிவியல் பாடங்கள் / மனையியல் |
| B.Sc கம்ப்யூட்டர் சயின்ஸ், ஐ.டி (IT),கம்ப்யூட்டர் டெக்னாலஜி (CI), B.C.A | முன்னுரிமை - கணிதம் / புள்ளியல் / கம்ப்யூட்டர் சயின்ஸ் / வணிகக் கணிதம் |
| B.Sc இயற்பியல், வேதியில், எலக்ட்ரானிக்ஸ், அப்ளைடு சயின்ஸ் | கணிதம், இயற்பியல், வேதியில் |
| B.Sc பயோ கெமிஸ்ட்ரி, இன்டஸ்டிரியல் கெமிஸ்ட்ரி, ஊட்டச்சத்து, உணவுத்துறை, மைக்ரோ பயாலஜி | வேதியியல், உயிரியல் |
| B.Sc தாவரவியல், பிளான்ட் பயோ-டெக்னாலஜி, பிளான்ட் பயாலஜி | வேதியியல், உயிரியல் |
| B.Sc. விலங்கியல், அட்வான்ஸ்டு விலங்கியல் | விலங்கியல் / உயிரியல் |
| B.Sc பயோ-டெக்னாலஜி | முன்னுரிமை உயிரியல் |
| B.Com, B.Com (Computer Application),கார்ப்பரேட் செக்ரட்ரிஷப், E-Commerce, அக்கவுன்டங் & பைனான்ஸ், B.A எக்னாமிக்ஸ், B.C.S (கார்ப்பரேட் செக்ரட்ரிஷப்) | முன்னுரிமை - காமர்ஸ் குரூப் |

- ஏதேனும் ஒரு இளங்கலைப் பட்ட படிப்பிற்கு பின் ஓராண்டு கால படிப்பான டீ.டு஡.ளுஉ (நூலக அறிவியல்) படித்தால் நூலகராக பணியாற்றலாம்
- பெரும் பாலன இளங்கலை பட்டப் படிப்புகள் அஞ்சல் வழி மூலம் கற்கலாம், இருப்பினும் சில வேலைவாய்ப்புகளுக்கு அஞ்சல் வழி பட்டப் படிப்புக்கு முன்னுரிமை தரப்படுவதில்லை

 

# சட்டம் படிப்பு

B.L அதாவது சட்டக் கல்வி என்பது நீதிமன்றத்தில் வாதாடுவது என்று பல மாணவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதையும் தவிர அதிக வருமானத்தை கரக் கூடிய வேறு சில பட்டப்படிப்புகளும் உள்ளன அவை இன்டர் நேஷனல் லா, பேமிலி லா, பேங்கிங் லா, பிராப்பர்டி லா மற்றும் லேபர் லா ஆகும்.

| பட்டம் | தகுதி | காலம் |
|---|---|---|
| B.L<br>B.I | +2<br>ஏதேனும் ஒரு இளநிலைப் பட்டம் | 8 ஆண்டுகள்<br>3 ஆண்டுகள் |
| B.A.,B.I (Hons) | +2 | 5 ஆண்டுகள் |
| L.L.B | +2 | 5 ஆண்டுகள் |
| L.L.B | ஏதேனும் ஒரு இளநிலைப் பட்டம் | 3 ஆண்டுகள் |
| மேற்கண்ட படிப்புகளுக்கு தமிழ்நாடு அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கல்லூரிகளில் நுழைவுத் தேர்வின்றி சேர்க்கை நடைப்பெறுகிறது. இந்தியாவின் இதர முன்னனி கல்லூரிகளில் நுழைவுத் தேர்வு உண்டு | | |
| முதுநிலை டிப்ளமா<br>மனித உரிமைகள், தொழிலாளர்கள், காப்புரிமை, வரிவதிப்பு, கம்பெனி, வங்கி உள்ளிட்ட துறைகளின் சான்றிதழ் பட்டயம் | ஏதேனும் ஒரு பட்டம் ஆல்லுத LLB | 1 ஆண்டு |

## மாணவர்களுக்கா சில குறிப்புகள்

அதிக மதிப்பெண் எடுப்பவர் முதல் குறைந்த மதிப்பெண் ஏடுப்பவர் வரை அனைத்துத் தரப்பினருக்கும் பலவிதமான பட்டப்படிப்புகளும் குவிந்து கிடக்கின்றன.மத்திய அரசு ரூ தமிழக அரசு கல்லூரிகளில் படித்தால் கல்விக்கட்டணம் மிகக்குறைவு. அரசின் பல்வேறு உதவித் தொகைகளைப் பெறுவதுடன் அரசு நிறுவனங்களில் படித்தால் வங்கிக் கடன் எளிதில் கிடைக்கும். நிகர்நிலைப் பல்கலைக்கழகம் ரூ தனியார் கல்லூரிகளில் படிப்பைப் பொறுத்தும் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தும் கட்டணங்கள் வேறுபடுகின்றன. கல்லூரிகளைத் தேர்ந்தெடுக்கும் முன் அனைத்து விவரங்களையும் ஆறிந்து பிறகு சேருங்கள

ஏந்தத் துறையில் படித்திருந்தாலும் கணினி சார்ந்த அடிப்படைப் பயிற்சிகளை பட்டங்களைப் பெற்றிருத்தல் ஆவசியமாககிறது. மேலும் ஒய்வு நேரங்களில் இன்டர்நெட் மூலம் வீட்டில் இருந்தபடியே ஆன்லைன் டியூசன் எடுத்தல், ஆன்லைன் மார்க்கெட்டிங், மொழிபெயர்ப்பு பணிகள், டேட்டா என்ட்ரி எனப் பல தொழில்களைத் திறம்பட செய்து வருவாய் பெறலாம்

## ஆசிரியர் பணிக்கான படிப்புகள்

கற்பிப்பததில் தனி திறனும் ஆர்வமும் உள்ளவர்கள் ஆசிரியர் படிப்புகளை கற்கலாம். ஆசிரியர்களுக்கான திறமையை வளர்த்துக் கொள்வதன் மூலம் அரசு மட்டுமல்லாமல் தனியார் மற்றும் வெளிநாடுகளிலும் அதிக சம்பளத்துடன் வேலை வாய்புள்ள துறையாகும்.

| தகுதி | பயிற்சி / பட்டம் | காலம் | யாருக்கு பாடம் எடுக்கலாம் |
|---|---|---|---|
| +2 அல்லது இளநிலைப்பட்டம் | மான்டசரி பயிற்சி (நல்ல ஆங்கிலப் புலமை இருத்தல் சிறப்பு) | 6 மாதம் முதல் 1 ஆண்டு (முழு மற்றும் பகுதி நேரம்) | 3 முதல் 6 வயது குழந்தைகளுக்கு |
| + 2 | ஆசிரியர் பயிற்சி ஞுஙிடீழுஅய ஜை வுநயஉாநச வுசயஜைஜைபெ | 2 ஆண்டுகள் | 1 - 5 வகுப்பு |
| இளநிலைப் பட்டம் | B.Ed | 1 ஆண்டு | 6 - 10 வகுப்பு |
| முதநிலைப் பட்டம் | B.Ed | 1 ஆண்டு | 11 - 12 வகுப்பு |

### மாற்றுதிறனாளிக்கான ஆசிரியர் மற்றும் பயிற்சியாளர்களுக்கான படிப்புகள்

மாற்றுத் திறனாளிகள் என்பவர்கள், மனித இனத்தில் தனிச்சிறப்பு பெற்றவர்கள். அவர்களுடைய நலப்பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு சிறப்பான ஆற்றலும், மனோநிலையும் வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கான நலப் பணி என்பது எளிதானதல்ல. அதீத பெறுமையும், சமயோசித அறிவும், இரக்கம் மற்றும் பொறுப்புணர்வு போன்ற பலவித பண்புகள் மிகவும் முக்கியம்.

பள்ளி மேல்நிலைப் படிப்பில் எந்தப் பாடத்தை தேர்வு செய்து படித்திருந்தாலும் கவலையில்லை. மாற்றுத்திறனாளிகளின் நலப்பணிகள் தொடர்பான பட்டப்படிப்பு, டிப்ளமோ மற்றும் சான்றிதழ் படிப்புகளில் சேர்ந்து படிக்கலாம். இந்தியா முழுவதும் சுநாயடிடைவையவழைெ ஊழரஉெடை ழக ஐனெயை(சுஊஐ) என்ற அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட பல கல்லூரிகளில் இதுதொடர்பான படிப்புகள் வழங்கப்படுகின்றன.

பார்வைக் குறைபாடு உள்ளவர், கேட்டல் குறைபாடு உள்ளவர் மற்றும் மனநல பாதிப்புகள் உள்ளவர் என்ற பல நிலைகளில், எதில் ஒருவருக்கு ஆர்வம் உள்ளதோ, அதற்கான படிப்பை தேர்ந்தெடுத்துப் படிக்கலாம். டுழஉழஅழவழச யனெ ஊநசநடிசயட ீயடளலஇ யுரவளைஅஇ ஏழஉயவழைெயட உழரெநடடைெபெ யனெ ஊயசந பளைஎைபெ போன்ற பலவிதமான துறைகளில் சிறப்பு பட்டப்படிப்புகள் உள்ளன

| தகுதி | பயிற்சி / பட்டம் | காலம் |
|---|---|---|
| +2 | டிப்ளமா - சைகை மொழி (Sign Language) | 1 ஆண்டு |
| | டிப்ளாம - சமூகம் சார்ந்த எஜூகேஷன் | 1 ஆண்டு |
| | டிப்ளாம - சமூகம் சார்ந்த எஜூகேஷன் (கண் பார்வையற்றோர் / காது கேளாதோர் / மனவளர்ச்சி குன்றிபோர்க்கு - கல்வி கற்பிக்க | 2 ஆண்டுகள் |
| இளநிலைப் பட்டம் | B.Ed., (ஸ்டிபஷல் எஜூகேஷன்) | 2 ஆண்டு |

# வேளாண்மை படிப்புகள்

வேளாண்மை ஆறிவியியல் ஆழிந்துவரும் விவசாயத்திற்கு எதிர்காலத்தில் அதிக தேவை எற்படும் என்பது உண்மையே இப் படிப்பைப் படிபடிப்பலர்களுக்கு ஆரசு மற்றும் தனியார் வேலைவாய்ப்புகள், ஆராய்ச்சி, விவசாய மேற்பார்வையாளர் பணிகளில் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இத்துறையில் பயின்றவர்கள் சிவில் சர்வீஸ் தேர்வில் எளிதில் சாதிக்க முடியும்

தகுதி:

1. படிப்புகளுக்கு வில் இயற்பியல் மற்றும் வேதியியல் பாடங்களுடன் முதன்மைப் பாடமாகக் கணிதம் / தாவரவியல் / உயிரியல் படித்து அதனுடன் பின்வரும் ஏதேனும் ஒன்றைப் படித்திருக்க வேண்டும் அதாவது உயிரியல் / கம்ப்யூட்டர் சயின்ஸ் / புள்ளியியல் / மைக்ரோபயாலஜி / பயோகெமிஸ்ட்ரி / பயோடெக்னாலஜி மனையியல் / நர்சிங் / ஊட்டச்சத்து உணவுமுறை.

2. டிப்ளமோவிற்கு +2 வில் உயிரியல், விவசாயம் சார்ந்த பாடங்கள் ஆவசியம்.

சேர்க்கைமுறை :

+2 தேர்வில் மேற்கண்ட பாடங்களில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் நேரடி சேர்க்கை.+2 வில் வக்கேஷனல் பிரிவில் (விவசாயம் மற்றும் உயிரியல் சார்ந்த பாடங்கள்) படித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலும் மற்றும் ஆதன் கீழ் இயங்கும் கல்லூரிகளிலும் வழங்கப்படும் சில பாடப்பிரிவுகள் பிற கலை ஆறிவியல் கல்லூரிகளிலும் வழங்கப்படுகின்றன. மேலும் விவரங்களுக்கு : www.tnau.in வெப்சைட்டில் தெரிந்துக் கொள்ளலாம்

| பட்டம் | பிரிவு | காலம் |
|---|---|---|
| B.Sc | 1. வேளாண்மை (Agri)<br>2. தோட்டக் கலை (Hoeticulture)<br>3. வனவியல்ட (Forestry) | 4 ஆண்டுகள் |
| B.Sc | 1. மனையில் (Home Science)<br>2. வேளாண் வர்த்தக நிர்வாகம் (Agri Business Management) | 3 அல்லது 4 ஆண்டுகள் |
| B.Tech | • வேளாண் பொறியியல் (Agriculture Engg)<br>• தோட்டக்கலை (Horticulture)<br>• உணவு பதப்படுத்துதல் (Food Processing Engg.)<br>• பயோ டெக்னாலஜி (Bio-Technology)<br>• ஆற்றல் & சுற்றுப்புற பொறியியல் (Energy & Environmental Engg.)<br>• பயோ-இன்பர்மெட்டிக்ஸ் (Bio-informatics)<br>• வேளாண்மை தகவல் தொழில்நுட்பம் (Agriculture info-Tech) | 4 ஆண்டுகள் |
| டிப்ளாமா | வேளாண்மை & கிராமப்புற மேம்பாடு<br>(ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயம், கோவை & காந்திகிராம கிராமிய பல்கலைக் கழகம், திண்டுகள்) | 2 ஆண்டுகள் |

- பால் மற்றும் பால் பொருள்களில் தேவை உலக அளவில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது,
- பசு வளர்ப்பு, உணவு முறை, சுகாதாரம், பண்ணை மேலாண்மை, தரக்கட்டுபாடு, பதப்படுத்தும் புதிய தொழில் நுட்பகளை உருவாக்குதல் போன்ற பணிகளை டெய்ரி டெக்னாலஜிஸ்டுகள் எனப்படும் தொழில் நுட்ப வல்லுநர்கள் செய்கிறார்கள்.
- இத்துறையில் பல்வேறு டிப்ளமோ B.Sc., B.Tech ஆகிய படிப்புகளை பல கல்வி நிறுவனங்கள் தருகின்றன. குறிப்பாக ஆலகாபாத்தில் உள்ள அலகாபாத் அக்ரிகல்ச்சுரல் இன்ஸ்டிட்யூஷல் +2 சயின்ஸ் குருப் ஆல்லது விவசாயம் முடித்தவர்களுக்கு 2 வருட டிப்ளமோ படிப்பு வழங்கப்படுகிறது. முடித்ததும் வேலை கிடைக்க வாய்ப்புகள் அதிகமுள்ளது.

## மருத்துவம் - கால்நடை படிப்புகள்

+2 வில் இயற்பியல், வேதியியல் & ஊயிரியல் (ஆல்லது தாவரவியல் / விலங்கியல் பாடப்பிரிவைப் படித்தவர்கள் மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவம் படிப்புகளில் சேரலாம். அவை

| பட்டம் | ஆண்டுகள் |
|---|---|
| MBBS (பொது மருத்துவம் | 5 1/2 ஆண்டுகள் |
| BHMS (சித்தா) | 5 1/2 ஆண்டுகள் |
| BHMS (ஹோமியோபதி) | 5 1/2 ஆண்டுகள் |
| BAMS (ஆயுர்தேம்) | 5 1/2 ஆண்டுகள் |
| BNYS (இயற்கை மருத்துவம் & யோகா) | 5 1/2 ஆண்டுகள் |
| BUMS (யுனானி) | 5 1/2 ஆண்டுகள் |
| BDS (பல்மருத்துவம்) | 5 ஆண்டுகள் |
| B.Sc., (நர்ஸிங்) | 4 ஆண்டுகள் |
| B.Sc., (ஆப்டோமெரி) | 4 ஆண்டுகள் |
| B.P.T (பிசியோதெரபி) | 4 1/2 ஆண்டுகள் |
| BOT ( ஆக்குபேஷனல் தெரபி) | 4 1/2 ஆண்டுகள் |
| B.Sc., (மெடிக்கல் நியூட்ரிசன் - ஊட்டச்சத்து வழி சிகிச்சை | 3 1/2 ஆண்டுகள் |
| B.Sc., (மெடிக்கல் ஆப்தால்மிக் டெக்னாலஜி - கண் மருத்தவம்) | 3 ஆண்டுகள் |
| B.Sc., (மனித உடற்கூறு) | 3 ஆண்டுகள் |
| S.Sc., (ரேடியோ தெரபி - கதிர்வீச்சு | 3 ஆண்டுகள் |
| B.V.Sc (கால்நடை மருத்துவம்) | 5 ஆண்டுகள் |
| B.F.Sc., (மீன்வள அறிவியல்) | 4 ஆண்டுகள் |
| **+2 வில் இயற்பியல் மற்றும் வேதியியல் படித்தவாகளுக்கு** | |
| B.Pharm (மருந்துகள்துறை) | 4 ஆண்டுகள் |
| B.Sc., (ஸ்பீச் தெரபி & ஹியரிங் - செவித்திறன் & பேச்சு பயிற்சி) | 3 ஆண்டுகள் |

## பொறியியல் படிப்புகள்

| பட்டம் | கல்வி தகுதி | ஆண்டுகள் |
|---|---|---|
| B.E / B.Tech | +2 (கணிதம், இயற்பியல் மற்றும் வேதியியல் ) | 4 ஆண்டுகள் |
| | டிப்ளமா / B.Sc., ( இரண்டாம் ஆண்டில் நேரடி சேர்க்கை கணிதம் அவசியம்) | 3 ஆண்டுகள் |

### பல்வேறு பொறியியல் துறைகள்

எரோநாட்டிகல்
மெரைகன்
மெக்கட்ரானிக்ஸ்
ரோபோட்டிக்ஸ்
ரப்பர் டெக்னாலஜி
புட் டெக்னாலஜி
பெட்ரோகெமிக்கல்
பாலிமர் டெக்னாலஜி
சிவில் இன்ஜினியரிங்
லெதர் டெக்னாலஜி
மேனுபேக்சரிங்
மெக்கானிக்கல்
ஆட்டோ மொபைல்
பயோ மெடிக்கல்
பயோ டெக்னாலஜி
கெமிக்கல் டெக்னாலஜி
செராமிக் டெக்னாலஜி
பயர் ஈன்ஜினியரிங்
டெலிகம்யூனிக்கேஷன்
பயோ இன்பர்மேட்டிக்ஸ்
கம்ப்யூட்டர் சயின்ஸ்
பிரின்டிங் டெக்னாலஜி
பேஷன் டெக்னாலஜி
டெய்ரி டெக்னாலஜி
மைனிங் டெக்னாலஜி
ஜெனிடிக் ப்ரொடஷன்
டெக்ஸடைல் டெக்னாலஜி
இன்டஸ்ட்ட்ரியல் இன்ஜினியரிங்
இன்பர்மேஷன் டெக்னாலஜி
எலக்ரானிக்கல் எலக்ட்ரானிக்ஸ்
எலக்ரானிக்ஸ் கம்யூனிகேஷன்
எலக்டானிக்ஸ் &
இன்ஸ்ட்ருமென்ஷேன்
என்விரான்மெண்டல்
இன்ஜினியரிங்
அக்ரிகல்ச்சரல் இன்ஜினியரிங்
ப்ரொடஷன் இன்ஜினியரிங்
ஜியோ அன்பர்மேட்டிக்ஸ்



## AIM FOR A PROMISING FUTURE

### சிறப்பு அம்சங்கள்

- இவ்வருடத்தில் 150-க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு நேரடி வளாகத் தேர்வின் மூலம் வேலை வாய்ப்பு.
- பின்வரும் தொழில் துறை சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படுகிறது
  **Microsoft Certified, Adobe Certified, ICTACT-J2EE, AutoDesk-Digital Prototyping, PLC-SCADA, Embedded System, AutoCAD, Land Survey, PCB Design etc.**
- **WIFI** - தொலை தொடர்பு வளாகம்.
- பிரபல தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (**MOUs**)
- தொழில்துறை சார்ந்த அனுபவமிக்கவர்கள் மூலம் பயிற்சி பட்டறை மற்றும் கலந்தாய்வு கருத்தரங்கம்.
- முன்னனி நிறுவனங்களுடன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வகுப்புகள்.
- நவீன உபகரணங்களுடன் கூடிய ஆய்வக வசதி.
- மிக அருகில் பேருந்து நிலையம் (2 கி.மீ) மற்றும் ரயில் நிலையம் (3 கி.மீ)

## Courses Offered

**UG:**

B.E - CSE, ECE, EEE, CIVIL, MECH

B.Tech IT

**PG:**

MBA

M.E (CSE)

M.E (VLSI)

### COMPANIES VISITED IN THIS YEAR

KGiSL, digital nirvana, SUTHERLAND, Chegg, Cogudel technologies, Su-Kam, GSI, andromeda, ISS, nest, YOGAM BPO, SHRIRAM Life Insurance, DYNAMIC, Invest2Care, ProjectsAbroad

# ஸ்ரீ வித்யா

## பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி

(AN ISO 9001:2008 CERTIFIED INSTITUTION)

விருதுநகர்

போன் : 04562-267467

**2013 - 2014 ம் ஆண்டு சேர்க்கை நடைபெறுகிறது**

### பல்கலைக்கழகத் தேர்வில் தரவரிசை (ரேங்க்) பெற்ற மாணவர்கள்



| D.Prasanna Balagurusamy | Vasuki Devi | Merlin Sheeba |
|---|---|---|
| 15th Rank | 32th Rank | 26th Rank |
| CSE(2008-2012) | MBA(2010-2012) | MBA(2009-2011) |

இவ்வருடத்தில் 150-க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு நேரடி வளாகத் தேர்வின் மூலம் வேலை வாய்ப்பு



Soft Skill Training



Value Added Courses



Guest Lectures by Industry Experts



MOUs signed with Leading Companies





### Academic Associates

ICTACT, IBM, Invest2Care, BSNL, TVS TYRES, Sharp, Prolific

**அட்மிஷனுக்கு தொடர்பு கொள்க :**

**9750996973, 9750977068, 9750946685**

திண்டுக்கலில் நடைபெறும் தினமலர் கல்வி கண்காட்சியில் எங்களுடைய ஸ்டால் என்-29 க்கு வருகை புரியும் அனைத்து மாணவ - மாணவியர்களை அன்புடன் வரவேற்கிறோம்.

- ஆண்ணா பல்களைக்கழகத்தின் கீழ் இயங்கும் பொறியியல் கல்லூரிகளில் தற்போது நுழைவுத்தேர்வு கிடையாது. +2 வில் பெற்ற மதிப்பெண் ஆடிப்படையில் கட் இப் மார்க் கணக்கிடப்பட்டு தரவரிசைப்கட்டியல் வெளியிடப்பட்டும்

$$\text{கட் - ஆப் மார்க்} = \frac{\text{கணிதம்}}{2} + \frac{\text{இயற்பியல்}}{4} + \frac{\text{வேதியியல்}}{4}$$

- +2 விற்கு பிறகு இன்ஜினியரிங்க்கு இணையான 5 இண்டு படிப்பு பல கல்லூரிகளில் உள்ளது.
- இந்தியாவில் உள்ள நிகர்நிலை இதர பல்கலைக்கழகங்கள் தனி நுழைவுத்தேர்வு மூலம் சேர்க்கை ஆளிக்கின்றன.

## கட்டிடக்கலை படிப்பு

| தகுதி | ஆண்டுகள் |
|---|---|
| +2 வில் கணிதத்தை ஒரு பாடமாக கட்டாயம் படித்திருக்க வேண்டும், அல்லது டிப்ளமா பட்டயம் கணிதம் அவசியம். | அண்ணா பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் சேர +2 டிப்ளமா மதிப்பெண்ணும் NATA என்ற தனி நுழைவுத் தேர்வு மதிப்பெண்ணும் தேவை. B.Arch க்கனா AIEEE தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மூலம் NIT உள்ளிட்ட இந்தியாவின் இனைத்து நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கும் விண்ணப்பிக்கலாம். |

## கவுன்சிலிங் செல்லும் மாணவர்களே...

தற்போது இன்ஜினியரிங் கவுன்சிலிங் செல்லும் மாணவர்களுக்கு...நினைத்த கல்லூரி கிடைக்கவில்லையே... எதிர்பார்த்த பாடம் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் இருக்கிறது. இந்த ஏக்கம் பலருக்கு கவலையாகக் கூட மாறிவிடுகிறதைப் பார்க்கிறோம் அப்படி அல்லாமல்

- நமக்கு கிடைக்கக்கூடிய பாடத்தில் எது நல்லது? தற்போது கிடைக்கக்கூடிய கல்லூரிகளில் எது சிறந்தது என்பதை முடிவு செய்து எடுக்க வேண்டும்.
- விரும்பிய கல்லூரி கிடைக்காததைவிட, விரும்பிய பாடப்பிரிவு கிடைக்கிறதா என்ற பாருங்கள்
- பலர் தங்கள் சொந்த மாவட்டத்துக்குள் கல்லூரி கிடைத்தால் இதே தரத்தில் உள்ள வேறொரு கல்லூரியில் தங்கிப் படிப்பதைவிட,வீட்டிலிருந்து செல்வது சிக்கனமாக இருக்கும் என்று கருதுகிறார்கள்.
- இவற்றையெல்லாம் விட நீங்கள் எடுக்கப் போகும் பாடத்தை விரும்பி படிக்க உங்களுக்கு மனம் இருக்கிறதா என்பதை உங்கள் மனசாட்சியிடம் கேளுங்கள். அந்த பாடத்தை எந்த கல்லூரியில் சேர்ந்து படித்தாலும் நன்றாகப் படிப்பேன் என்ற உறுதிமொழியை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.
- நீங்கள் படிக்கும் துறையில் வேலை வாய்ப்புகள் எங்கெல்லாம் உள்ளன. அவற்றில் சேர்வதற்கு அடிப்படை தகுதிகள் என்ன... உயர் கல்வி படிக்க என்னவெல்லாம் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை முதலிலேயே தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் தற்போது சாதிக்காததை இன்னும் நான்காண்டு இடைவெளியில் நன்கு தயார்படுத்திக் கொண்டு களத்தில் இறங்கி சாதிப்பேன் என்ற எண்ணத்தை கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் லட்சியத்துக்கு துணைபுரிவோர், வழிகாட்டியாக அமைவோரிடம் அதிகமாக தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் லட்சிய எல்லைக்கு வெளியில் உள்ள விஷயங்களை மிகக் கவனமாகவே அணுகுங்கள். இத்தனையையும் சுலபமாக கடைபிடிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களை நீங்களே நம்பி களத்தில் இறங்குங்கள் வெற்றி உங்களை விட்டு எப்போதும் விலகாது. வாழ்த்துக்கள்.

# பொறியியல் டிப்ளமா (பட்டய) படிப்புகள்

| தகுதி | ஆண்டுகள் |
|---|---|
| 10th Std | 3 ஆண்டுகள் |
| +2 (இரண்டாம் ஆண்டில் நேரடி சேர்க்கை | 2 ஆண்டுகள் |

**B.E / B.Tech** ல் பட்டியலிடப்பட்டுள்ள பெரும்பாலான பிரிவுகள் டை மேக்கிங், டெய்ரி டெக்னாலஜி, பவுல்ட்ரி டெக்னாலஜி, டெக்ஸ்டைல் பிராசசிங், விமானப் பராமரிப்பு, கம்ப்யூட்டர் நெட்வொர்க்கிங் உள்ளிட்ட இன்னும் பல்வேறு பிரிவுகளில் 3 வருட டிப்ளமோ முடித்தவுடன் வேலையில் இருந்து கொண்டே பகுதிநேர (Part Time) B.E படிப்போ ஆல்லது B.E க்கு இணையாகக் கருதப்படும் A.M.I.E தேர்வு எழுதி பொறியியல் பட்டம் பெறலாம்.

### மேலும் சில பொறியியல் சார்ந்த டிப்ளமோ படிப்புகள்

பல்வேறான காரணங்களால், பொறியியல் பட்டடப்படிப்பு சேர முடியாத மாணவர்களுக்கு, பொறியியல் டிப்ளமோ படிப்புகள் வரப்பிரசாதமாக அமைந்துள்ளன. அத்தகைய டிப்ளமோ படிப்புகளில் சிலவற்றை இக்கட்டுரை அலசுகிறது.

### 1. ஏரோநாடிகல் பொறியியல் துறையில் டிப்ளமோ படிப்பு

ஏஐசிடிஇ அமைப்பால் அனுமதியளிக்கப்பட்ட மற்றும் இந்திய அரசால் அங்கீகாரமளிக்கப்பட்ட, 3 வருட ஏரோநாடிகல் படிப்பை பின்வரும் கல்வி நிறுவனங்கள் வழங்குகின்றன,

ஆச்சார்யா பாலிடெக்னிக் - பெங்களூர்

பஞ்சாப் ஏர்கிராப்ட் மெயின்டெனன்ஸ் இன்ஜினியரிங் கல்லூரி - பஞ்சாப்

அரசு பாலிடெக்னிக் கல்லூரி - நெய்யாட்டின்கரா, கேரளா

### தகுதிகள் மற்றும் சேர்க்கைமுறை

பத்தாம் வகுப்பு அல்லது "O" நிலையிலான படிப்பை, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி வாரியங்கள் அல்லது கவுன்சிலில் முடித்திருக்க வேண்டும் மற்றும் கணிதம் மற்றும் அறிவியலில் குறைந்தது 35% கூட்டு மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

திறனாய்வு தேர்வு, நேர்முகத் தேர்வு மற்றும் மதிப்பெண் ஆகியவற்றின் அடிப்படையிலேயே தேர்வு நடைபெறும்.

### கற்பிக்கப்படும் அம்சங்கள்

Aircraft instrumentation system, CAR, aircraft maintenance and practice, aircraft structures, avionics & aircraft radio system, maintenance management, basic aerodynamics, fluid mechanics & pneumatics aircraft inspection & documentation.

### வேலை வாய்ப்புகள்

ஏர்லைன்ஸ், ஏர்கிராப்ட் உற்பத்தி யூனிட்டுகள், ஏர் டர்பைன் தயாரிப்பு பிளான்டுகள் அல்லது விமான தொழில்துறைகளுக்கான டிசைன் மேம்பாட்டு திட்டங்கள் ஆகியவற்றில் வேலைவாய்ப்புகள் உள்ளன.

பொது மற்றும் எச்ஏஎல், சுரூனு போன்ற தனியார் நிறுவனங்களில் பராமரிப்பு மேற்பார்வையாளர்களாகவும், L&T -ல் உதவியாளராகவும், ஏரோஸ்பேஸ் நிறுவனங்களில் இளநிலை விஞ்ஞானிகளாகவும் பணிகளை பெறும் வாய்ப்பு, இப்படிப்பை முடித்தவர்களுக்கு நிறைந்துள்ளன.

சம்பளம் - புதிதாக படிப்பு முடிந்து பணியில் சேரும் ஒருவர், வருடத்திற்கு ரூ.3 லட்சம் வரை சம்பாதிக்கலாம்.

படிப்பு கட்டணம் - முழு படிப்பிற்கான கட்டண செலவு ரூ.1,35,000.

## 2. வேளாண் பொறியியல் துறையில் டிப்ளமோ படிப்பு

வேளாண்மை உற்பத்தி மற்றும் செயல்பாட்டில், பொறியியலையும், தொழில்நுட்பத்தையும் பயன்படுத்துவதே இப்படிப்பாகும். மேலும், இப்படிப்பானது, மிருக உயிரியல், தாவர உயிரியல், மெக்கானிக்கல், சிவில், எலக்டரிகல் மற்றும் கெமிக்கல் பொறியியல் ஆகியவற்றின் அம்சங்கள் இப்படிப்பில் உள்ளடங்கியிருப்பதோடு, வேளாண் கோட்பாடுகள் பற்றிய அறிவும் உண்டு. இந்த 3 வருட டிப்ளமோ படிப்பானது, ஏஐசிடிஇ மற்றும் இந்திய அரசின் அங்கீகாரம் பெற்றது.

### தகுதிகள் மற்றும் சேர்க்கைமுறை

ஏதேனும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட கல்வி வாரியத்தில் குறைந்தபட்சம் 10ம் வகுப்பு முடித்திருக்க வேண்டும். கணிதம் மற்றும் அறிவியலில் குறைந்தபட்சம் 35மூ கூட்டு மதிப்பெண்களைப் பெற்றிருக்க வேண்டும். மேலும், கூட்டு நுழைவுத்தேர்வின் மூலம், இறுதி சேர்க்கை நடைபெறும். இதைத்தவிர, கவுன்சிலிங் செயல்பாடும் முக்கியம்.

### முக்கிய பாட அம்சங்கள்

Farm power engineering, soil mechanic and soil science, soil water conservation and land reclamation, field exposure training.

### பணி வாய்ப்புகள்

தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், சிறிய நீர்ப்பாசன துறைகள், நிலத்தடி நீர் பயன்பாட்டுத் துறைகள், வேளாண் துறைகள், டிராக்டர் நிறுவனங்கள், வேளாண் உற்பத்தி மையங்கள், நீர்ப்பாசன திட்டங்கள், நீர் பயன்பாட்டுத் திட்டங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாநில வேளாண் கூட்டுறவுத் துறைகள் போன்ற பலவிதமான நிறுவனங்கள் மற்றும் திட்டங்களில் இப்படிப்பை முடித்த ஒருவர் வேலை வாய்ப்புகளை பெறலாம்.

சம்பளம் - இப்படிப்பை புதிதாக முடித்த ஒருவர், மாதம், குறைந்தது ரூ.15,000 முதல் ரூ.25,000 வரை பெறலாம். கல்விக் கட்டணம் - முழு படிப்பையும் முடிக்க ரூ.60,000 செலவாகிறது.

## 3. ஆட்டோமொபைல் இன்ஜினியரிங் டிப்ளமோ படிப்பு

வாகன இன்ஜினியரிங் துறையின் ஒரு பிரிவாக, ஆட்டோமொபைல் துறையில் வழங்கப்படும் 3 வருட டிப்ளமோ படிப்பானது, தியரி மற்றும் பிராக்டிகல் அறிவை ஒருசேர வழங்குகிறது.

### தகுதிகள் மற்றும் சேர்க்கை முறை

சிபிஎஸ்இ நடத்தும் 10ம் வகுப்பு தேர்வுக்கு இணையான தேர்வுகளில் தேறியவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். ஐந்து பாடங்களில் கூட்டாக 45மூ கூட்டு மதிப்பெண்களைப் பெற்றிருக்க வேண்டும். தொழில்நுட்ப கல்வி வாரியத்தால் நடத்தப்படும் நுழைவுத்தேர்விலும் தேறியிருக்க வேண்டும்.

### பாடத்திட்டம்

Engineering drawing, strength of materials, auto shop, repair and maintenance, manufacturing process, theory of machines போன்ற அம்சங்கள் முக்கியமானவை.

### பணி வாய்ப்புகள்

இப்படிப்பை முடித்தப்பின்னர், ஆட்டோமெபைல் துறையில் பணிக்கு சேரலாம் அல்லது பி.டெக் ஆட்டோமொபைல் போன்ற உயர் படிப்புகளில் சேரலாம். ஒருவர், ஜுனியர் இன்ஜினியர் என்ற நிலையில் பணியில் சேரலாம். சம்பளம் - ஆரம்ப நிலையில், மாதம், ரூ.8000 முதல் ரூ.10,000 வரை சம்பளமாக பெறலாம்.

படிப்பு கட்டணம் - ஒரு வருடத்திற்கு ரூ.29,040 செலவாகிறது.

## 4. சிவில் இன்ஜினியரிங் டிப்ளமோ படிப்பு

சாலைகள், பாலங்கள், கால்வாய்கள், அணைகள் மற்றும் கட்டடங்கள் போன்ற பல்வேறு கட்டுமானங்களின் வடிவமைப்பு, கட்டுதல் மற்றும் பராமரிப்பு போன்ற அம்சங்களை இப்படிப்பு உள்ளடக்கியுள்ளது. இது 3 வருட காலஅளவைக் கொண்டது.

### தகுதிகள் மற்றும் சேர்க்கை முறைகள்

ஏதேனுமொரு அங்கீகரிக்கப்பட்ட கல்வி வாரியத்தில் பத்தாம் வகுப்பு படிப்பை முடித்திருப்பதோடு, டிப்ளமோ நுழைவுத் தேர்வையும் எழுத வேண்டும். இத்தேர்வு வருடத்திற்கு ஒருமுறை நடத்தப்படும்.

### பாடத்திட்டம்

Workshop practice, construction materials, building construction, civil engineering drawing, soil & foundation engineering and hydraulics போன்ற பிரதான அம்சங்கள் கற்றுத்தரப்படும்.

### பணி வாய்ப்புகள்

இந்த டிப்ளமோவை முடித்த ஒரு மாணவர், பி.டெக் சிவில் படிப்பில் லேட்டரல் என்ட்ரி முறையிலோ, கல்லூரியில் நேரடி முறையிலோ சேர்க்கை பெறலாம். ஆராய்ச்சியாளர் மற்றும் ஜுனியர் இன்ஜினியர் போன்ற பணிவாய்ப்புகள் உள்ளன. சம்பளம் - ஆரம்ப நிலையில், ஒருவர் மாதம் ரூ.10,000 வரை சம்பாதிக்கலாம். கட்டணம் - ஒரு வருடத்திற்கு ரூ.32,095 செலவாகிறது.

## 5. கெமிக்கல் இன்ஜினியரிங் டிப்ளமோ படிப்பு

ரசாயனம் மற்றும் ரசாயனம் தொடர்பான தயாரிப்புகளுக்காக, வேதியியல் மற்றும் பொறியியல் ஆகிய துறைகளின் இணைப்புருவாக்கம்தான் கெமிக்கல் இன்ஜினியரிங். இத்துறை ஆராய்ச்சியின் மூலம், நேனோ டெக்னாலஜி, குரநட உநடடள மற்றும் பயோமெடிக்கல் இன்ஜினியரிங் போன்றவை புதிதாக உருவானவை. இந்த டிப்ளமோ படிப்பு 3 வருட காலஅளவைக் கொண்டது.

### தகுதிகள் மற்றும் சேர்க்கை

பத்தாம் வகுப்பு தகுதியைப் பெற்றிருப்பதோடு, டிப்ளமோ நுழைவுத்தேர்வையும் எழுத வேண்டும்.

### பாடத்திட்டம்

Thermodynamics, reaction engineering, paper making, pulping process and environmental studies.

### பணி வாய்ப்புகள்

ஒருவர், கெமிக்கல் இன்ஜினியரிங் பி.டெக் படிப்பில் லேட்டரல் என்ட்ரி முறையில் சேர்வதோடு, paper plants> fertilizer manufacturing units, industrial chemical manufacturing units and refineries போன்ற பலவற்றில் பணி வாய்ப்புகளைப் பெறலாம். 'Shift In - Charge' என்ற பணியைப் ஒருவர் பெறுகிறார். சம்பளம் - புதியவர் ஒருவர், சராசரியாக, மாதம் ரூ.10,000 முதல் ரூ.25,000 வரை பெறுகிறார். கட்டணம் - ஒரு செமஸ்டருக்கு ரூ.2000 வீதம் செலவாகிறது.

## 6. கம்யூட்டர் ஹார்வேர் மற்றும் நெட்வொர்கிங் டிப்ளமோ

இத்துறை ஒரு இன்டர்டிசிப்ளினரி துறையாகும். இந்த 3 வருட டிப்ளமோ படிப்பானது, ஒருவர் பொறியாளராக பயிற்சி பெற அல்லது பிற துறை பயன்பாட்டிற்கான கணினி திறன்களை புரிந்துகொள்வதை மேம்படுத்தல் போன்றவற்றுக்கு துணைபுரிகிறது.

### தகுதிகள் மற்றும் சேர்க்கை

ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி வாரியம் அல்லது கவுன்சில் ஆகியவற்றில் 10ம் வகுப்பு அல்லது "மு" நிலை படிப்பை முடித்திருக்க வேண்டும். கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில், குறைந்தபட்சம் 35மு கூட்டு மதிப்பெண்களைப் பெற்றிருக்க வேண்டும்.

### பாடத்திட்டம்

Computers, digital theory, C theory, C lab, data communication and communication networks, advanced microprocessor.

### பணி வாய்ப்புகள்

ஒருவர் உயர்கல்வி மேற்கொள்ளலாம் அல்லது கணினி தொழில்துறை, நிதி சேவைகள், டெலிகம்யூனிகேஷன், பயோடெக்னாலஜி, இ-காமர்ஸ் மற்றும் தொடர்புடைய துறைகளில் ஜுனியர் சாப்ட்வேர் இன்ஜினியராக வேலை வாய்ப்பினை பெறலாம். சம்பளம் -புதிதாக பணிக்கு சேர்பவர்கள், மாதம் ரூ.15,000 முதல் ரூ.20,000 வரை சம்பளம் பெறலாம். கட்டணம் - ஒரு வருடத்திற்கு ரூ.1,35,000 செலவாகிறது.

### 7. கம்யூட்டர் இன்ஜினியரிங் டிப்ளமோ படிப்பு

இப்பிரிவானது, கம்யூட்டர் சயின்ஸ் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் துறைகளின் கோட்பாடுகள் மற்றும் நுட்பங்களை உள்ளடக்கியது. மேலும், கணிப்பொறி அம்சங்களின், சோதனை மற்றும் வடிவமைப்பையும் உள்ளடக்கியது. பொதுவாக, கம்ப்யூட்டர் இன்ஜினியர்கள், சாப்ட்வேர் மற்றும் ஹார்டுவேர் இன்ஜினியர்கள் என்று இருவகைப்படுகிறார்கள். இந்த டிப்ளமோ படிப்பு 3 வருடங்களைக் கொண்டது.

**தகுதிகள் மற்றும் சேர்க்கை**

அங்கீகரிக்கப்பட்ட கல்வி வாரியத்தில் 10ம் வகுப்பை முடித்திருக்க வேண்டும் மற்றும் ஊநுவு தேர்வை எழுத வேண்டும்.

**பாடத்திட்டம்**

Data structure, computer networking, programming in 'c' digital techniques, visual basic, java programming.

**பணி வாய்ப்புகள்**

இதை முடித்த ஒருவர், உயர்கல்வியை மேற்கொள்ளலாம் அல்லது "டெக்னிக்கல் இன்ஜினியர்" என்ற நிலையிலான பணியை, ஐடி தொடர்பான நிறுவனங்களில் பெறலாம்.

சம்பளம் - ஒருவரின் சராசரி சம்பளம், மாதம் ரூ.12,000 முதல் ரூ.30,000 வரை கிடைக்கிறது. கல்விக் கட்டணம் - ஒரு செமஸ்டருக்கு ரூ.3000 செலவாகிறது(டெல்லியில் அமைந்த குருநானக் தேவ் பாலிடெக்னிக்கின் கட்டணப்படி).

### 8. எலக்ட்ரிகல் இன்ஜினியரிங் டிப்ளமோ படிப்பு

எலக்ட்ரிசிட்டி, எலக்ட்ரானிக்ஸ் மற்றும் எலக்ட்ரோமேக்னடிசம் ஆகியவற்றின் ஆய்வு மற்றும் பயன்பாடு ஆகியவை சம்பந்தமானது இத்துறை. தொழில்துறைக்கு தேவைப்படும் வகையில், மாணவர்களை, சிறந்த எலக்ட்ரிகல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் பொறியாளர்களாக உருவாக்குவது இப்படிப்பின் நோக்கம்.

இந்த 3 வருட டிப்ளமோ படிப்பானது, ஏஐசிடிஇ மற்றும் இந்திய அரசாங்கம் ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்றது.

**தகுதிகள் மற்றும் சேர்க்கை**

ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி வாரியம் அல்லது கல்வி கவுன்சில் ஆகியவற்றில் 10ம் வகுப்பு அல்லது "O" நிலை தேறியிருக்க வேண்டும். கணிதம் மற்றும் அறிவியல் பாடத்தில், கூட்டாக குறைந்தபட்சம் 35மூ மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

**பாடத்திட்டம்**

Electrical engineering materials, electro mechanical energy, electro magnetic field theory.

**பணி வாய்ப்புகள்**

இப்படிப்பை முடித்தவர்களுக்கு, ஏராளமான பணிவாய்ப்புகள் காத்துக்கொண்டுள்ளன. தொழிற்சாலை மற்றும் வணிக மையங்களில், பராமரிப்பு பொறியாளர்களாக பணி வாய்ப்புகளைப் பெறுகிறார்கள். மேலும், புகழ்பெற்ற தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில், பயிற்சி பெறுபவராகவும் சேர முடியும். இவைத்தவிர, மென்பொருள் நிறுவனத்தில், வடிவமைப்பு பொறியாளராக சேரலாம். தொழிற்சாலைகளிலுள்ள, எலக்ட்ரிக் மின்சார உற்பத்தி பிரிவில், power plant engineer ஆகவும் பணி வாய்ப்புகளைப் பெறலாம்.

### 9. எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் டிப்ளமோ படிப்பு

இத்துறை, தொடர்ச்சியான முறையில் மாற்றம் கண்டும், வளர்ந்தும் வரும் ஒரு துறையாகும். இத்துறை, உலகமயமாக்கல் சமூகத்தில் அதிக தாக்கத்தை செலுத்துகிறது. இந்த டிப்ளமோ படிப்பானது, ஒரு குறுகிய வட்டத்திற்குள் நில்லாமல், நவீன தொழில்நுட்ப யுக்திகளை மாணவர்கள் கற்றுக்கொள்ள வழிசெய்கிறது. இப்படிப்பானது, ஏஐசிடிஇ மற்றும் இந்திய அரசின் அங்கீகாரம் பெற்றது.

**தகுதிகள் மற்றும் சேர்க்கை**

ஏதேனுமொரு அங்கீகரிக்கப்பட்ட கல்வி வாரியம் அல்லது கவுன்சிலில், 10ம் வகுப்பு அல்லது "O" நிலை படிப்பை முடித்திருக்க வேண்டும். கணிதம் மற்றும் அறிவியலில், குறைந்தது 35% கூட்டு மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

### பாடத்திட்டம்

Adv. communication, analog communication, analog electronics, applied mathematics, basics of electronics & electrical engineering.

### பணி வாய்ப்புகள்

சாப்ட்வேர் மற்றும் ஹார்டுவேர் அம்சங்களை தன்னகத்தே கொண்ட எலக்ட்ரானிக்ஸ் துறையானது, பொறியியல் துறையின் அடிப்படையாகும். மேலும், எலக்ட்ரானிக்ஸ் அன்ட் கம்யூனிகேஷன் பிரிவானது, பிற துறைகளுடன் தன்னை சம்பந்தப்படுத்திக் கொண்டுள்ளது.

எனவே, இப்படிப்பை முடித்தவர்களுக்கு, டெலிகம்யூனிகேஷன் இன்ஜினியரிங், எலக்ட்ரிகல் அன்ட் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங், கம்யூட்டர் சயின்ஸ் இன்ஜினியரிங், இன்பர்மேஷன் சயின்ஸ் இன்ஜினியரிங் மற்றும் மெக்கட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணிவாய்ப்புகள் கிடைக்கின்றன.

## நியூட்ரிஷன் - டயடீஷன் துறைகளில் குவிந்திருக்கும் வாய்ப்புகள்

உலகளவில் சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், இதய நோய்,புற்றுநோய் போன்றவை இந்திய சமூகத்தில் அதிகளவில் இருக்கிறது.எனவே இதற்கான சிறப்பு மருத்துவ கவனிப்புகள்தேவைப்படுகின்றன. எனவேதான் கடந்த 1930ம் ஆண்டுகளில்நியூட்ரிஷன் படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் 1960ம்ஆண்டுகளில்தான் இந்தவகை படிப்புகள் முக்கியத்துவம் பெற்றன. இன்றைய நிலையில் புதியவகையிலான பயிற்சிகளுடன் நியூட்ரிஷன் படிப்புகள் புதிய பாய்ச்சல்களை தொடங்கியுள்ளன.

நியூட்ரிஷன்கள்/டயடீஷியன்களின் பணிகள்:

- உணவின் ஊட்டச்சத்து தரத்தை ஆராய்தல்
- அனைத்து உணவு உள்ளடக்கங்களையும் புரிந்துகொள்ளுதல
- உணவு பழக்கவழக்கங்கள் சம்பந்தமாக மக்களுக்கு ஆலோசனை வழங்குதல
- ஆரோக்கியத்தை அதிகரிக்கும் டயட் முறைகளை திட்டமிடுதல

நியூட்ரிஷன் மற்றும் டயடீஷியன் துறைகளுக்கிடையிலான எளிய வேறுபாடுகள்:

நியூட்ரிஷன் படிப்புகள்:

நீங்கள் 10,12 ஆம் வகுப்புகளை முடித்தப்பின்னர் நியூட்ரிஷன் படிப்பை படிக்கலாம்.

பெரியளவிலான வேலை வாய்ப்புகள்:

நெஸ்ட்லே, கேட்பரிஸ், யுனிலிவர், ஜி.எஸ்.கே, எலி லில்லி, நோவர்டிஸ் போன்ற பெரிய நிறுவனங்களில்,ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் மெடிக்கல் மார்கெடிங் போன்ற பணிகளுக்கு அதிகளவில் நியூட்ரிஷன்கள்தேவைப்படுகின்றனர். மேலும் இப்படிப்பு படித்தோருக்கான வேலை வாய்ப்புகள் மெதுவாக, அதேசமயம் நீடித்த அளவில் வளர்ந்து கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசு அமைப்புகள்:

சமூக மற்றும் மேம்பாட்டு பணிகளில் நியூட்ரிஷன்கள் பணியமர்த்தப்படுகிறார்கள். மேலும் பொது சுகாதாரதுறைகளிலும் அவர்கள் தேவைப்படுகிறார்கள். உணவு & நியூட்ரிஷன் வாரியத்தில் (எப்.என்.பி), இருக்கும்பணியிடங்களை பொறுத்து, யு.பி.எஸ்.சி. நேர்முகத்தேர்வை நடத்துகிறது. நீங்கள் பணியமர்த்தப்பட்டால், கிளாஸ் -1 கெசடட் அதிகாரியாக ஆகலாம். அதிகளவிலான நியூட்ரிஷன்கள், ஆலோசகர், தொழில்நுட்பஆலோசகர் அல்லது உதவி ஆலோசகர்களாக பணியாற்றுகிறார்கள். நாடு முழுவதும் 43 நீட்டிப்பு/களயூனிட்களில் நியூட்ரிஷன்களின் சேவை தேவைப்படுகிறது.

சம்பளம்:

புதிதாக பணிக்கு வரும் ஒருவர், மாதம் 15000 முதல் 20000 வரை சம்பாதிக்கலாம். அனுபவம் பெற்றபிறகு, 30000 வரை சம்பாதிக்கலாம்.

# நிதி & நிர்வாகத்துறை படிப்புகள்

- +2 முடித்த உடனேயே, மாலை நேரக் கல்லூரியிலோ, தொலை நிலைக் கல்வி வாயிலாகவோ வேறு பட்டப் படிப்புகளில் சேர்ந்து படித்துக் கொண்டும் கீழ்க்கண்ட படிப்புகளைப் படிப்புகளைப் படிக்க முடியும்.
- இந்தத் தொழில்படிப்புகளைப் படிப்பதற்குக் கட்டணம் அதிகமில்லை. இந்தப் படிப்புகளில் சேருவதும் மிகவும் எளிது. இனால் கடுமையாகப் படித்தால் தான் இத்தேர்வுகளில் தேர்ச்சி பெற முடியும். படிக்கும் போதே வருவாய் உட்டும் வாய்ப்பும் ஊள்ளது.
- எங்கெல்லாம் வேலை செய்யலாம்? அரசு & தனியார் துறை நிறுவனங்கள், வங்கிகள், கல்லாரிகள், பன்னாட்டு நிறுவனங்கள்ட, தணிக்கை நிறுவனங்கள், தணிக்கை நிறுவனங்கள், தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள், பங்குச் சந்ற்தை நிறுவனங்கள்

## Charted Accountant (CA)

- தனி நபர்கள் மட்டும்மல்லாமல் நிறுவனங்களின் கணக்கு வழக்குகளைச் சரிபார்த்து வருமான வரித் துறைக்குக் கணக்குகளைத் தாக்கல் செய்பவர்கள் சார்ட்டாட் ஆக்கவுண்ட்டன்டுகள் கம்பெனிகளின் கணக்கு வழக்குகளைச் சரிபார்த்து ஆடிட் செய்யும் அதிகாரம் இவர்களுக்குத் தான் உண்டு.
- குறைந்தபட்ச தகுகி:்2(பட்டம் பெற்றவராக இருந்தாலும் சிபிடி தேர்வில் தேர்ச்சி பெறுவது ஆவசியம்)
- காலம்: குறைந்தபட்சம் 4 இண்டுகள்

முதல் நிலை - CPT தேர்வு
(Common Proficiency Test)

- ஆடிட்டரிடம் ஜீனியராகட் பயிற்சியில் சேர்தல்
- சிறப்பு கம்ப்யூட்டர் பயிற்சி முடித்தல்
- இரண்டாம் நிலை தேர்வுக்குப் பகுதி

இரண்டாம் நிலை - PCC தேர்வு
(Professional Competence Course)

இறுதித் தேர்வு

Accounting Technical Course
ICAI ஆல் வழங்கப்படும் இப்படிப்பில் பயிற்சி, ப்ராக்டிகல், கம்ப்யூட்டர் ட்ரெயினிங் & தேர்வுகளை முடித்து இச்சான்றிதழைப் பெற ஆகும் காலம் இரண்டு ஆண்டுகள் இச்சான்றிதல் பெற்றவர்கள் Accountant / Junior Accountant ஆக பல்வேறு துறைகளில் பனிபுரியலாம்.
விவரங்களுக்கு
The Institute of Charted Accounts of India
122, Mahatma Gandi Road, Nugampakkam, Chennai - 600 034 Ph - 044-39893989 www.icai.org
முகவரியில் தொடர்ப்பு கொள்ளலாம்

## ICWAI

- தொழில் நிறுவனங்களை ஆறிவியல் ரீதியாக நிர்வாகம் செய்வதற்காக காஸ்ட் ஆக்கவுன்ட்டன்ட்களை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புதான் இன்ஸ்டிட்யூம் அப் கால்ட் அண்ட் வொர்க்ஸ் அக்கவுன்ட்டன்ட்ஸ் அப் இந்தியா ஐசிடபிள்யூஜ
- ஒரு பொருளை உருவாக்க எவ்வளவு செலவு செய்ய வேண்டும் எந்த அளவுக்கு விலை வைத்தால் சந்தையில் வெற்றிகரமாக விற்பனைசெய்ய முடியும் என்பதைக் கணக்கிட்டுச் சொல்வது காஸ்ட் அக்கவுன்ட்டன்ப்படுகளின் பணியாகும். காஸ்ட் கன்ட்ரோலர், மார்க்கெட்டிங் மேனேஜர் சீஅப் இன்டர்னல் ஆடிட்டர் சீஅப் அக்கவுன்ட்டன்ட் பைனான்ஸ் டைரக்டர் இப்படி பல பொறுப்புகளை வகிக்க முடியும்.

| பவுண்டேஷன் தேர்வு | இண்டர்மீடியேட் தேர்வு | இறுதி தேர்வு |
|---|---|---|
| + 2 படித்தவர்கள் | பவுண்டேஷன் தேர்வு தேறியவர்கள் அல்லது பட்டதாரிகள் நேரடியாக இத்தேர்வை எழுதலாம் | இண்டர்மீடியட் தேர்வில் தேறியவர்கள் |

Southern India Regional Council, 4, Montieth Lane, Egmore, Chennai - 600 008, Ph - 044 28554443
www.icwai.org என்ற முகவரியில் தொடர்பு கொண்டு மேலும் விவரங்களை பெறலாம்

## CAT (Certificate in Accounting Technician)

ICWAI ஆல் வழங்கப்படும் இப்படிப்பில் பயிற்சி, ப்ராக்டிகல், கம்ப்யூட்டர் ட்ரெயினிங் & தேர்வுகளை முடித்து ஈச்சான்றிதழைப் பெற இகும் காலம் /ர் இண்டு மட்டுமே. தபால் வழியில் படிக்க இயலாது இச்சான்றிதழ் பெற்றவர்கள் Accountant / Junior Accountan ஆக பல்வேறு துறைகளில் பணிபுரியலாம்.

| தேர்வு முறை | தகுதி |
|---|---|
| பவுய்ட்டேஷன் தேர்வு (Part I)<br>இறுதி சோதனைத் தேர்வு<br>(Competency Level - Part II) | +2 ஆல்லது டிப்ளமோ படித்தவர்கள்,<br>மேற்கண்ட பவுண்டேஷன் தேர்வு அல்லது ன் பவுண்டேஷன் தேர்வில் தேறியவர்கள் ஆல்லது பட்டதாரிகள் நேரடியாக ஏழுதலாம் |

## ICSI - இன்ஸ்டிடியூட் ஆப் கம்பெனி செக்கரட்டரீஸ் ஆப் இந்தியா

நிர்வாதகத் திறமை தீர்க்கமான முடிவு எடுக்கும் திறன், சட்ட நுணுக்கங்களைப் புரிந்து கொள்ளும் திறன், திட்டமிடல், செயல்படுத்துதல் போன்ற திறன்களோடு விளங்கினால் கம்பெனியின் முன்னேற்றத்திற்கு வேராக செயல்பட்டு விரைவிலேயே உயர்ந்த பதவிக்கு வரலாம். சட்டவிதிமுறைகளின்படி ஒரு நிறுவனம் செயல்படுகிறதா என்பதை உறுதிப்படுத்த வேண்டிய தலையாய கடமை கம்பெனி செக்ரெட்டரிக்கு உண்டு. இத்தேர்வுகளுக்கான பயிற்சிகளை நேரடி ஆஞ்சல் வழியில் பெறலாம்

| தேர்வு | பவுண்டேஷன் தேர்வு | எக்ஸிக்யூட்டிவ் தேர்வு | இறுதித் தேர்வு |
|---|---|---|---|
| ICSI | +2 அல்லது டிப்ளமா படித்தவர்கள் | பவுண்டேஷன் தேர்வு தேறியவர்கள் அல்லது நுண்கலை தவிர இதர பட்டம் படித்தப் பட்டதாரிகள் நேரடியாக எழுதலாம். நுண்கலை படித்தப் பட்டதாரிகள் கட்டாயம் பவுண்டேஷன் தேர்வை எழுத வேண்டும் | இண்டர் மீடியட் தேர்வில் தேறியவர்கள் |

ICSI - SIRC House, No 9 (Old No. 4 ), Wheat Crofts Road, Nunkambakkam, Chennai - 600 034, Web: www.icsi.edu என்ற முகவரியில் தொடர்பு கொண்டு மேலும் விவரங்களை பெறலாம்

## General Institute of Fishering Nautical and Engineering Training(CIFNET)




General Institute of Fishering Nautical and Engineering Training(CIFNET) என்ற நிறுவனம் ஆழ்கடலீல் மீன் பிடிக்கும் கப்பலைச் செலுத்தும் பயிற்சியை ஆளிக்கிறது.10வது ஆல்லது ஆதற்கு இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 17 முதல் 20 வயதுக்குள் இருக்கவேண்டும். பொதுவாக நுழைவுத் தேர்வு மற்றும் நேர்முக தேர்வு அடிப்படையில் இந்த சேர்க்கை நடைப் பெறுகிறது. ஆழ்கடல் மீன் பிடிக்கும் கப்பல் ஓட்டுநர் பயிற்சியின் காலம் 18 மாத காலமாகும்.

ஆழ்கடலில் மீன்பிடிப்புத் தொழிலுக்கு நம் நாட்டிலும், வெளிநாட்டிலும் நல்ல வரவேற்பு இருந்து வருவதால் இந்த பயிற்சியை முடித்தவுடனே நல்ல வேலை கிடைக்க வாய்ப்புகள் உள்ளன.பொதுவாக மீன்பிடிக் கப்பலில் சேருபவருக்கு நல்ல உதியம் கிடைப்பதோடு, கிடைக்கும் லாபத்திற்கேற்றவாறு ஊக்கத்தொகை கிடைக்கவும் வாய்ப்புள்ளது. இப்படிப்புகள் குறித்த விவரங்களை சென்னை இராயபுரத்தில் உள்ள பயிற்சிப் பள்ளியில் ஆணுகி இதன் விவரங்களைப் பெறமுடியும்.

# தற்போதைய சூழலில் வேலைவாய்பை தரும் படிப்கள் சில

### ஹோட்டல் நிர்வாகம் கேட்டரிங்

கேட்டரிங் சயின்ஸ் - ஓட்டல் நிர்வாகம் படிப்பானது வாடிக்கையாளர் சேவையை முன்னிலை படுத்தி பயிற்சி அளிக்கப்படும் தொழில் படிப்பாகும். இந்த படிப்பபை மேற்கொள்ளும் மாணவர்கள் ஓரளவு நல்ல தோற்றமுடையவராகவும், பல மொழிகளில் பேசக்கூடிய திறமை, சிறந்த பழகும் முறை, தன்னம்பிக்கை உடையவராகவும் இருப்பது அவசியம். இந்த படிப்பில் ஈடுபட்டுள்ள மாணவர்கள், நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் பணியாற்ற தனியார் ஹோட்டல்களில் வாய்ப்பு அளிக்கப்படுவார்கள். இவர்கள் மேற்கொள்ளும் நேரடிப்பயிற்சி மற்றும் செயல்முறை பயிற்சி அடிப்படையில் இவர்களின் செயல்பாடு கணித்து மதிப்பெண் வழங்கப்படும். படிப்பு காலம் 3 ஆண்டுகள். இதே பிரிவில் முதுகலை உண்டு.

உணவு மற்றும் பானங்கள் தயாரித்தலுக்குத் தேவைப்படும் திறன் மற்றும் அறிவு வளர்க்கும் விதமாக இத்துறைப் பாடங்கள் அமைகின்றன. பிரன்ட் ஆபிஸ் மேனேஜ்மென்ட், மார்க்கெட்டிங், நிதி நிர்வாகம், மனிதவள மேம்பாடு, ஹோட்டல் மற்றும் கேட்டரிங் சட்டம், சொத்துரிமை நிர்வாகம், கம்ப்யூட்டர் அறிவியல் உள்ளிட்ட துணைப்பிரிவுகளும் இப்பாடப்பிரிவில் இடம் பெறுகின்றன. படிப்பு காலம் 3 ஆண்டுகள். இதே பிரிவில் முதுகலை உண்டு

### சுற்றுலாத் துறை

சுற்றுலாத் துறை பணி வாய்ப்புகள் இன்று நமது இளைஞர்களுக்கு பெரிய வரப்பிரசாதமாக இருக்கிறது. பெரிய பெரிய சுற்றுலா ஏஜென்சிகள், ஸ்டார் ஓட்டல்கள் போன்றவற்றில் தான் இந்தத் துறை பணி வாய்ப்புகள் உருவாகின்றன.




சுற்றுலாத் துறையில் முறையான சான்றிதழ் அல்லது டிப்ளமோ படிப்பை முடித்தவருக்கான வாய்ப்புகள் அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன. என்றாலும், இந்தத் துறை பணி வாய்ப்புகளுக்கான அடிப்படை தேவைகளாக நல்ல தகவல் தொடர்புத் திறன் தான் உள்ளது.

ஆங்கிலத்தில் சிறப்பாக பேச முடிந்தவரே இந்தத் துறையின் இலக்கு. மேலும், இந்திய வரலாறு, கலாசார சிறப்புகள், தொன்மையான பாரம்பரியம் போன்றவற்றில் நல்ல அறிமுகமும், ஞானமும் இருக்க வேண்டும் என்றே இந்த நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன.

வெறும் வரலாறு, புவியியல் போன்ற அடிப்படை தகவல்களுடன் எதிர்கால இந்தியா பற்றிய தெளிவான கருத்து பெற்றிருப்பதும் முக்கியமாக தேவைப்படுகிறது. நமது போக்குவரத்து வசதிகள், சாலை, ரயில் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை நிறுவனங்களோடு நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ளும் திறன் பெற்றிருப்பதும் கூடுதல் திறன்களாக கருதப்படுகின்றன.

இந்த போக்குவரத்துத் துறை நிறுவனங்களின் கால அட்டவணை, முன்பதிவு செய்யும் வசதிகள் போன்றவற்றையும் பெற்றிருப்பது சிறப்பான பலன் தரும். ஓட்டல் மேனேஜ்மென்ட், சுற்றுலா நிர்வாகம், நல்ல உபசரிப்புத் திறன் போன்றவற்றைப் பெற்றிருப்பதும் சிறப்பான தகுதிகளாக அமையும்.

இவை எல்லாவற்றையும் விட இந்திய மொழிகளில் சிலவற்றைக் கற்றுக் கொள்ளுங்கள். முதலில் பேசுவதற்கும் பின்பு எழுதுவதற்கும் கற்றுக் கொள்வது மிகவும் உதவும். குறிப்பாக இந்தி, கன்னடம், தெலுங்கு மற்றும் மலையாளம் போன்றவற்றை அறிவது உதவும்.

## விஷூவல் கம்யூனிகேஷன்

வாழ்க்கையை எப்படி அமைத்து கொள்ள போகிறோம் நாம் படிக்கும் பட்ட படிப்பு வாழ்க்கைக்கு பயன்படுமா என்கிற பயமும் இருக்கும். வளமான எதிர்காலத்தை உண்டாக்கும் ஒரு நம்பிக்கையாக நிறை வேலை வாய்ப்புகளை அள்ளித்தர கூடிய துறையாக விஷூவல் கம்யூனிகேஷன் படிப்பு உள்ளது.

”விஷூவல் கம்யூனிகேஷன் படிப்பு உள்நாட்டில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புகளை தருகிறது. பிளஸ் 2 முடித்த மாணவர்கள் உயர்கல்வி போகும் மாணவர்கள் இந்த பட்டப்படிப்பை தேர்ந்தெடுக்கலாம். உலகம் முழுவதும் ஊடகத்துறையில் அதிக வேலைவாய்ப்புகள் உள்ளன. இந்த துறை மூலம் பணம் மட்டும் அல்லாது பெரும் பெயரும் புகழும் கிடைக்கிறது.

விஷூவல் கம்யூனிகேஷன் படிப்பு எனபது (காட்சித் தகவல் படிப்பு) காட்சிகள் மூலம் அனைத்து விபரங்களையும் தெரிவிக்கும் கலையை விஷூவல் கம்யூனிகேஷன் படிப்பு கற்றுத் தருகிறது. இந்த படிப்பில், குறியீடு, சமூகவியல், கலை, இலக்கியம், கேமரா, எடிட்டிங், அனிமேஷன் என பல பிரிவுகள் உள்ளன. அனைத்து பிரிவுகளிலும் நல்ல வேலைவாய்ப்புகள் உள்ளன.

”டிவி“, மொபைல் போன்கள் புழக்கத்தில் இருக்கும்வரை, விஷூவல் கம்யூனிகேஷன் துறை நிலைத்து நிற்கும். இத்துறையில் பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்புகள் உள்ளது. இதில் திறமையானவர்களுக்கு ஆரம்பத்திலேயே 40 ஆயிரம் ரூபாய் அளவிற்கு சம்பளம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அது மட்டுமல்லாது ஊடகத்துறையை மூலம் மக்களுக்கு நடக்கும் அநீதிகளை வெளி கொண்டுவரும் வாய்ப்புகள் உண்டு. எனவே மாணவர்கள் இந்த துறையை தேர்ந்த்டுப்பதன் மூலம் பணமும் சம்பாதிக்க முடியும் அதேநேரம் சமூக தொண்டும் ஆற்ற முடியும்.

## பாராமெடிக்கல்

டாக்டர்களுக்கு அல்லது அறுவை சிகிச்சை செய்யும் சர்ஜன்களுக்கு அவர்கள் செய்யும் அவசர கால சிகிச்சையில் பணியில் உதவியாக இருப்பவரை பாராமெடிக்கல் பிரிவினர் என்று கூறுகிறார்கள். இத்துறையில் இணைய விரும்புபவர்கள், அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் தொடர்புடைய அறிவையும் விருப்பத்தையும் பெற்றிருப்பது அவசியம். குறிப்பாக ரேடியோகிராபர்களாகச் செயல்படுபவர்கள் எந்தவித அலர்ஜியையும் பெற்றிருக்கக் கூடாது. வேதிப்பொருட்களின் ஒவ்வாமை இருந்தால் பணியாற்றுவது சிரமம். பிசியோதெரபிஸ்ட் மற்றும் தொழில் சார்ந்த தெரபிஸ்டுகளாகச் செயல்படுபவர்கள் பொறுமை, பலம், நல்ல நோக்கம் மற்றும் நல்ல உடல்நிலையைக் கொண்டிருக்க வேண்டும். தனியார் மற்றும் அரசுத்துறை நிறுவனங்களில் அமோகமான வேலை வாய்ப்புகள் உள்ளன. ஆய்வுப் பணிகளில் ஈடுபடவும் இவர்களுக்கு ஏராளமான வாய்ப்புகள் கிடைக்கும்.

மருத்துவமனை மற்றும் சுகாதாரம் தொடர்புடைய துறைகள், தனியார் மருத்துவமனைகள், நர்சிங்ஹோம்கள், கிளினிக்குகள் ஆகியவற்றில் இத் துறைப் படிப்புகளில் தகுதி பெறுபவருக்கான வாய்ப்புகள் உள்ளன. ஆய்வுக் கூடங்களிலும் வாய்ப்புகள் கிடைக்கின்றன. சுயமாக தொழில் செய்யவும் உகந்தது இத்துறைப்படிப்புகள்.

### பேஷன் டெக்னாலஜி

ஆண்டாண்டு காலமாக நுணுக்கமான வேலைப்பாடுகளுக்காக அறியப்பட்ட இந்திய ஆடைகள் இன்று அதிக அளவில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதைக் காண்கிறோம். உலக பேஷன்களின் பரிசோதனை மையமாக இந்தியா திகழுகிறது என்று கூறும் அளவிற்கு நவீன தொழில்நுட்பத்தால் நாம் உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறோம். இத்துறையின் முக்கியப் பிரிவுகளாக சந்தை ஆய்வு, டிசைனிங், கார்மெண்ட் உற்பத்தி மற்றும் டெக்ஸ்டைல் ஆகியவற்றைக் கூறலாம். இத்துறையிலும் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆகியவை நடத்தப்படுகின்றன.

பட்டப்படிப்பில் சிறப்புப் படிப்புகள் நடத்தப்படும் பிரிவுகள் இவை தான்...

- Accessory designing and fashion designing
- Garment Manufacturing Technology
- Apparel marketing and Merchandising
- Leather and Garment Design and Technology
- Knitwear Design and Technology
- Textile Design and Development Fashion Journalism and Presentation

இதில் முதல் படிப்புக்கு பிளஸ் 2 தான் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிற படிப்புகளுக்கு பட்டப்படிப்பு தான் தகுதி. இந்தியாவின் முதன்மையான பேஷன் கல்வி நிறுவனம் என்.ஐ.எப்.டி., எனப்படும் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் பேஷன் டெக்னாலஜி. இது தவிர புதுடில்லியிலுள்ள ஐ.இ.சி., ஸ்கூல் ஆப் ஆர்ட் அண்டு பேஷன், இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஆர்ட் அண்டு பேஷன் டெக்னாலஜி, டில்லியிலுள்ள பியர்ல் அகாடமி ஆப் பேஷன் மற்றும் அங்குள்ள ஜே.டி. இன்ஸ்டிடியூட் ஆப் பேஷன் டெக்னாலஜி ஆகியவற்றைக் கூறலாம். பொதுவாக இந்த நிறுவனங்களின் படிப்புக்கு அகில இந்திய அளவில் நடத்தப்படும் போட்டித் தேர்வு மூலமாகவே சேர்க்கை நடத்தப்படுகிறது.






# கல்வி கடன் பெறுவது எப்படி

**நீங்களும் கல்விக் கடன் பெறலாம்-**

உயர் கல்வி பெறுவதற்கு போதிய பண வசதி இல்லாத மாணவர்களும் கல்வி பயில வேண்டும் என்பதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே இந்த கல்விக் கடன் வாய்ப்பாகும்.

**எந்தெந்த படிப்புகளுக்கு கிடைக்கும்?**

கல்விக் கடன் என்பது உயர்கல்வி படிக்க கிடைக்கும் கடன். மருத்துவம், பொறியியல், எம்.பி.ஏ., எம்.சி.ஏ., பி.காம்., பி.எஸ்சி., போன்ற படிப்பு களுக்கு கல்விக் கடன் வாங்கிக் கொள்ளலாம். அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் உள்ள அனைத்து படிப்புகளுக்கும் கடன் வாங்கிக் கொள்ளலாம். சில வங்கிகளில் கலைப் படிப்புகளுக்கு கல்விக் கடன் இல்லை என்று சொல்ல வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் இதுபோன்ற படிப்புகளுக்கு எளிதாக வேலை கிடைக்காது என்பதால் கடன் கொடுக்க மறுக்கும் நிலை இருக்கிறது. அதுபோன்ற நிலையில் சற்று போராடினால் மட்டுமே கடன் வாங்க முடியும். பத்தாம் வகுப்பு முடித்துவிட்டு டிப்ளமோ படிப்பவர்களுக்கும் கல்விக் கடன் உண்டு.

**எவ்வளவு கடன் கிடைக்கும்?**

நான்கு லட்சம் ரூபாய் வரை உத்தரவாதம் எதுவும் இல்லாமல் கடன் கிடைக்கும். 4 லட்சம் முதல் 7.5 லட்சம் வரை பெற்றோரில் ஒருவர் தனிநபர் உத்தரவாதம் கொடுக்க வேண்டிவரும். 7.5 லட்சம் ரூபாய்க்கு மேல் கடன் என்றால் சொத்து ஜாமீன் கொடுக்க வேண்டும். இது உள்நாடு மற்றும் வெளிநாடு சென்று படிக்கும் மாணவர்களுக்கு என அனைத்துக்கும் பொருந்தும்.

**எப்படி வாங்குவது?**

பெற்றோருக்கு எந்த வங்கியில் கணக்கு இருக்கிறதோ, அந்த வங்கி யில் கல்விக் கடன் பெறலாம். சில நகரங்களில் ஏதாவது ஒரு வங்கி, கல்விக் கடன் தருவதற்கென்றே ஒதுக்கப்பட்டிருக்கும். அப்படி இருக்கும்பட்சத்தில் அதில் கணக்கு ஆரம்பித்து, கல்விக் கடன் வாங்கிக் கொள்ளலாம்.

எந்த செலவுக்கு எல்லாம் கிடைக்கும்?

கல்விக் கட்டணம், விடுதி வாடகை மற்றும் சாப்பாட்டுச் செலவு, சீருடை, புத்தகங்கள், கல்விச் சுற்றுலா, மாணவருக்கு இன்ஷூரன்ஸ் பிரீமியம், கம்ப்யூட்டர்/லேப்டாப் உள்ளிட்டவைகளுக்கு கல்விக் கடன் வாங்கிக் கொள்ளலாம்.

**எப்படி கடன் வாங்குவது?**

கல்லூரியில் இருந்து கல்விக் கட்டணம், விடுதி வாடகை, உணவுக் கட்டணம், சீருடைகளுக்கு எனத் தனித்தனியாக எவ்வளவு ஆகும் என்று போன/பைட் சான்றிதழில் குறிப்பிட்டு வாங்கிக் கொள்ள வேண்டும். அதன்பிறகு வங்கியை அணுகி விண்ணப்பிக்க வேண்டும். அதற்குரிய காசோலை கல்லூரி பெயரில் கொடுக்கப்படும். புத்தகங்கள், கம்ப்யூட்டர் போன்றவற்றை வாங்கிவிட்டு அதற்குரிய ரசீதை வங்கியில் கொடுத்தால் அந்த பணம் கிடைத்துவிடும். இது மாணவரின் கடன் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும்.

**எப்போது கடனை திரும்பக் கட்டுவது?**

படிப்பு முடிந்து ஒரு வருடத் துக்குப் பிறகு கடனைத் திருப்பிச் செலுத்த ஆரம்பிக்கலாம். ஆனால், வேலை கிடைத்துவிட்டால் உடனே கடனைக் கட்ட ஆரம்பித்துவிட வேண்டும். முன்பு படிக்கிற காலத்தில் கடனுக்கான வட்டி கணக்கிடப்பட்டு, வசூலிக்கப்பட்டு வந்தது. ஆனால், 2009-க்குப் பிறகு கொடுக்கப்படும் கல்விக் கடனுக்கு, பெற்றோரின் ஆண்டு வருமானம் 4.5 லட்சம் ரூபாய்க்குள் இருந்தால் படிக்கிற

காலத்திற்கான வட்டியை மத்திய அரசே வங்கிகளுக்குக் கொடுத்து விடுகிறது. வெளிநாடுகளில் படிக்கிற மாணவர்களுக்கு இந்தச் சலுகையை வங்கிகள் தருவதில்லை. ஆனால், வெளிநாட்டுப் படிப்புக்கும், உள்நாட்டுப் படிப்புக்கும் ஒரே வட்டி விகிதம்தான்.

விரைவாக கடனைத் திருப்பிச் செலுத்தும் மாணவர்களுக்கு 1மூ வட்டி குறைக்கப்படுகிறது. மாணவிகளுக்கு வட்டியில் சுமார் 0.5மூ சலுகை அளிக்கப்படுகிறது. கடனை மாதத் தவணையாகக் கட்ட வேண்டும் என்பதில்லை. மாதத் தவணை காலம்போக எப்போதெல்லாம் பணம் கிடைக்கிறதோ, அப்போ தெல்லாம் அந்த தொகையைக் கட்டி கடன் பளுவை குறைத்துக் கொள்ளலாம்.

**தேவையான ஆவணங்கள்**

- கல்லூரி போனோ/பைட் சான்றிதழ்.
- கட்டணம் குறித்த தெளிவான தகவல்கள்.
- பெற்றோரின் வருமானச் சான்றிதழ்.
- இருப்பிடச் சான்றிதழ்.
- பள்ளி மாற்று சான்றிதழ்.
- 10 மற்றும் 12-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்.



## விளையாட்டுத்துறை

| பட்டம் | சான்றிதழ் / பட்டயம் / பட்டம் | காலம் |
|---|---|---|
| +2 ஏதேனும் ஒரு பட்டம் | யோகாசனத்தில் சான்றிதழ் படிப்பு | 6 மாதம் முதல் 1 வருடம் |
| +2 | C.P.Ed(உடற்கல்வி இசிரியர் - சான்றிதழ் படிப்பு | 2 வருடம் |
| | B.Sc (ஊட்டச்சத்தும், ஊடற்பயிற்சியும்) | 3 வருடம் |
| | B.P.Edஉடற்கல்வி, சுகாதாரம், விளையாட்டு) | 3 வருடம் |
| ஏதேனும் ஒரு இளநிலைப் பட்டம் | • முதுநிலை டிப்ளமோ<br>• எட்டச்சத்து & ஊடற்பயிற்சி<br>• ஊடற்பயிற்சி, மனோதத்துவம்<br>• Fitness(உடற்கட்டு)<br>• பயிற்சியாளாராக டிப்ளமோ பட்டம் (விளையாட்டு வீரர்களுக்கு மட்டும்) (ஹாக்கி, பேட்மிட்டன், கைப்பந்து, கூடைப்பந்து, கால்பந்து, கிரிக்கெட்) | 1 வருடம்<br><br><br><br>1 வருடம் |

- பள்ளி, கல்லூரி ஈறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களுடன் மாவட்ட , மாநில ஆளவில் விளையாட்டில் பெற்றுள்ள சாதனைகளும், சேர்க்கையில் ஏடுத்துக் கொள்ளப்படும். சாதனைகளுக்கேற்ப சேர்க்கை விதிமுறையில் தளர்வு ஆளிக்கப்படும்.
- இன்றைய சூழ்நிலையில் இந்தியாவில் விளையாட்டுத் துறை வேகமாக வளர்ந்து வருகிறது. பள்ளி, கல்லூரிகளில் ஊடற்பயிற்சி இசிரியராகவும், விளையாட்டு கிளப்களிலோ ஆல்லது தனிப்பட்ட முறையிலோ பயிற்சியாளராக வரலாம். மேலும் விபரங்களுக்கு

# மக்கள் கல்வி பொருளாதார மேம்பாட்டுச் சங்கம் (ஸ்பீச்)

# இளைஞர் முன்னேற்ற மையம்

நம் தாய் திருநாட்டின் அடுத்த 50 ஆண்டுகளுக்கு இளைஞர் ஜனத்தொகையே பொருளாதார மாற்றத்திற்கு காரணியாக உள்ளது. அப்படியிருக்க இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பின்மை, குறைந்த வேலைவாய்ப்பு, வேலையிழப்பு போன்றவை நாட்டின் கொள்கை ரீதியான, தீர்க்கப்படாத சவால்களாகவே காணப்படுகின்றன. இளைஞர்கள் முன்னேற்றத்திற்கான முக்கிய ஆதாரமாக சமூக மாற்றத்தின் ஆணிவேராக, பொருளாதார மாற்றம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வித்திடுபவர்களாக கருதப்பட்டாலும் வேகமாக வளர்ந்து வரும் வேலைவாய்ப்பின்மை மிகப் பெரிய பிரச்சனையாக உள்ளது.

இந்நிலை தேசிய சூழல் மட்டுமல்ல ஸ்பீச் பணிபுரியும் கிராமங்கள், பகுதிகள் மற்றும் மாவட்டத்தின் மிக முக்கிய பிரச்சனையாக, வளர்ச்சிக்கு தடையாகவும் உள்ளது. ஒரு வேளை பள்ளிகளில், கல்லூரிகளில் சேரும் எண்ணிக்கை கூடியிருந்தாலும் அதனை தாண்டி வேலைகளில் அதுவும் தகுதியான, கௌரவமான ஊதியத்திற்கு அமரக் கூடியவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகின்றது என்பது தான் மறுக்கமுடியாத புள்ளிவிபரம்/உண்மை. அதிலும் 22மூ இளைஞர் மட்டுமே கம்ப்யூட்டர் சம்பந்தமான பணிகளில் ஈடுபட்டுள்ளனர். ஒட்டுமொத்த இளைஞர் ஜனத்தொகையில் 25.9மூ வேலையற்றவர்களாக உள்ளனர். 40% இளைஞர்கள் வேலை வாய்ப்பின்மைக்கு எளிதில் பாதிக்கப்பட கூடியவர்களாக உள்ளனர்.அதற்காக இந்திய அரசு 2022 ஆண்டிற்குள்ளாக நாட்டின் 500 மில்லியன் இளைஞர்களின் திறன் வளர்க்க திட்டமிட்டுள்ளது.

ஸ்பீச் பணிபுரியும் கிராமங்களிலும் இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மை, குறைந்த ஊதியம், கல்விக்கேற்ற பணி கிடைக்காமை, இளைஞர்களின் பள்ளி இடைவிலகல், வேலைவாய்ப்பு வழிகாட்டுதலின்மை, சுமங்கலி திட்டத்தின் மூலம் வளர் இளம் பெண்கள் குத்தைகை தொழிலாளர்களாக கடத்தப்படுதல், சமூக விரோத செயல்களில் ஈடுபட தூண்டுதல், தொழிற்கல்வி வாய்ப்பின்மை, உயர் கல்விக்கான மூலதனமின்மை போன்றவை இளைஞர்களை வாழ்க்கை திறனற்றவர்களாக ஆக்குகிறது. சுயமாண்யோடு, சுய மரியாதையை நிலைநிறுத்த வேண்டிய இளைஞர்கள் பல்வேறு காரணிகளால் தன்னம்பிக்கை இழந்து, வாழ்வின் இலக்கு சுமையை பகிர்ந்து கொள்ள வேண்டியவர்கள் குடும்பத்தின் பாரமாக, பிரச்சனையாக மாறிவிடுகின்றனர். மாற்றத்திற்கு காரணமான இளைஞன் மாற்றத்திற்கு தடைகல்லாக மாறியுள்ளனர். மேற்கூறிய இளைஞர்களின் கல்வி, பொருளாதாரம், சமூகம், குடும்பம், ஆளுமை பண்புகள் சார்ந்த பிரச்சனைகளை அனுபவப் பூர்வமாக உணர்ந்த ஸ்பீச் நிறுவனத்தின் வெளிப்பாடே இந்த ஸ்பீச் இளைஞர் முன்னேற்ற மையம்.





வரும் 2016 ஆண்டிற்குள்ளாக திருச்சுழி, நரிக்குடி, காரியாபட்டி, அருப்புக்கோட்டை ஒன்றியகளிலுள்ள சுமார் 2000 நலிவுற்ற இளைஞர்களின் திறன் வளர்த்து வேலைவாய்ப்புகளை எற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதே ஸ்பீச் இளைஞர் முன்னேற்ற மையத்தின் இலக்காகும். இதற்காக சி.சி.எ/ப்.சி. நிறுவனத்தின் வழிகாட்டுதலோடு கீழ்கண்ட செயல்திட்டங்களை நடைமுறை படுத்த உள்ளது.

- இளைஞர்களின் முன்னேற்றப் பங்காளர்களோடு கலந்தாலோசனை கூட்டம்.
- இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, திறன் வளர்த்தல் வாய்ப்புக்கான கணக்கெடுப்பு.
- வேலை வாய்ப்புகள் குறித்த ஆவணம் தயாரித்தல்.
- இளைஞர் முன்னேற்ற மையம் ஏற்படுத்துதல்.
- வாழ்க்கைத் திறன் கல்வி, தொழிற்கல்விக்கான பயிற்சி கையேடு தயாரித்தல்.
- தொழிற்கல்வி சார்ந்த இளைஞர் தேர்வு மற்றும் குறைந்த கால பயிற்சி நடத்துதல்.
- உயர்கல்விக்கான வழிகாட்டுதல் கருத்தரங்கு நடத்துதல்.
- இளைஞர்களுக்கான அரசுத்திட்டங்களை ஆவணப் படுத்துதல்.
- பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிற்சி.
- மக்கள் அமைப்புக்களுக்கான அரசு தொடர்பு பயிற்சி.
- இளைஞர்களுக்கான தொழில் சார்ந்த கணிணி பயிற்சி.
- வேலை வாய்ப்பு கண்காட்சி/மேளா நடத்துதல்.
- இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு ஏற்பாடு

இதில் முதல் கட்டமாக திருச்சுழியை மையமாக வைத்து திருச்சுழி, நரிக்குடி ஒன்றியங்களின் சுமார் 1000 இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகவும் இரண்டாம் கட்டமாக காரியாபட்டி ஒன்றியத்திலும் மூன்றாவது கட்டமாக அருப்புக்கோட்டை ஒன்றியத்தின் 1000 இளைஞர்களின் வழிக்காட்டுதல் மற்றும் வேலைவாய்ப்பிற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும். முக்கியமாக இளைஞர்களை ஆற்றுப்படுத்தி, தன்னம்பிக்கை வளர்த்து சுயமாண்புடன் குடும்பம் மற்றும் நாட்டின் பொறுப்புள்ள குடிமக்களாக மாற்றுவதே இம்மையத்தின் தலையாய பணியாகும். இம்மையத்தில் சேர்ந்து பயன்பெற விரும்பினால் கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.




நிறுவனர் /திட்ட இயக்குனர்

**ஸ்பீச் இளைஞர் முன்னேற்ற மையம்**

5/639, காரியாபட்டி ரோடு

திருச்சுழி - 626129

போன்: 914566 - 202177



### 10 மற்றும் +2 மாணவர்களுக்கான

# உயர்கல்வி வழிகாட்டி 2013


**கையேடு உருவாக்கத்தின்**

கருத்தாக்கம் : **முனைவர். ஜான் தேவவரம்**
நிறுவனர் - SPEECH / RCPDS
**அ. எர்ஸ்கின்**
திட்ட இயக்குனர், ஸ்பீச்

பங்களித்தவர் : **வெ. செல்வரூபன்**
நிதிமேலாளர், ஸ்பீச்
**த. நியூட்டன்பொன்னமுதன்**
திட்டமேலாளர்,ஸ்பீச், சிவகாசி.

வடிவமைப்பு : **மு. பழனிக்குமார்**
ஆவண அலுவலர், ஸ்பீச், சிவகாசி.


**நாள்**
**மே 4 - 2013**
**இடம்**
**திருச்சுழி முதல் நிலை ஊராட்சி**
**சமுதாயக் கூடம்**
**(பூமிநாதர் கோவில் அருகில்)**


*Published by:*
RCPDS SPEECH
Thiruchuli

Designed by:
Documentation Division SPEECH